18 .11.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**OS. 24/2021**

**வா.சா.5**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கிருபா | | |
| **த /பெ** | நடராஜன் | **மதம்** | |
| **கிராமம்** | நெடிமோழியனூர் | **தொழில்** | |
| **தாலுக்கா** | திண்டிவனம் | **வயது** | 39 / 2025 |
| **மாவட்டம்** | விழுப்புரம் | **தேதி** | 18 .11.2025 |

இன்று சாட்சி அழைப்பாணையின் மூலம் வரவழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. இந்த வழக்கு சம்மந்தமான ஆவணங்களை கொண்டுவந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். நான் கொண்டு வந்துள்ள ஆவணத்தில் யார் யார் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் ஆர்.பார்த்திபன் போட்டுள்ளார். சாட்சிகள் யாராவது கையெழுத்து போட்டுள்ளார்களா என்றால் யாரும் கையெழுத்து போடவில்லை. இந்த ஆவணத்தை யார் தயார் செய்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. இந்த ஆவணத்தை யார் என் வசம் கொடுத்தார்கள் என்றால் ஆர். பார்த்திபன் கொடுத்தார். இந்த ஆவணம் 14/01/2020 ந் தேதியிட்ட ஆவணமாகும். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தின் அசல் ஆவணம் தான் நான் கொண்டு வந்துள்ள ஆவணம் என்றால் சரிதான். அசல் ஆவணத்திலும் பிரதிவாதி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் இல்லை. அசல் ஆவணத்தில் சாட்சிகள் எதுவும் இல்லை. ஆனால் நகலில் சாட்சிகள் உள்ளது. இந்த வழக்கிற்காக தான் வாதி நான் கொண்டு வந்துள்ள ஆவணத்தின் நகல் எடுத்து சாட்சிகளை வைத்து கையெழுத்து போட்டு தயார்

செய்து தாக்கல் செய்துள்ளார். நான் கொண்டு வந்துள்ள ஆவணம் வா.சா.ஆ. 7 ஆகும். *(மேற்படி ஆவணம் பிரதிவாதி தரப்பு ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)*

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u> :-

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். நான் வழக்கறிஞராக திண்டிவனம் நீதிமன்றத்தில் தொழில் செய்து வருகிறேன். நான் எத்தனை வருடமாக தொழில் செய்து வருகிறேன் என்றால் 2022 ம் ஆண்டிலிருந்து வழக்கறிஞராக பணி செய்து வருகிறேன். நான் வழக்கறிஞர் தொழில் மட்டுமே செய்கிறேன். வேறு தொழி ல் செய்யவில்லை. எனது குடும்பம் நெடிமோழியனூர் கிராமத்தில் உள்ளது. நெடிமோழியனூருக்கும் திண்டிவனம் நீதிமன்றத்திற்கு இடையே சுமராக 18 கி.மீ தூரம் இருக்கும். எனக்கு வாதி, பிரதிவாதிகளை தெரியுமா என்றால் சாட்சி பிரதிவாதி ஆர்.பார்த்திபனை தெரியும் என்று கூறுகிறார். நான் சம்மன் வந்ததற்காக சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். எனக்கு சம்மன் சிவக்குமார் தான் அனுப்பினார். நான் சிவக்குமார் அனுப்பிய சம்மனை தான் வாங்கினேன். பார்த்திபன் இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி எனக்கு தெரியாது. அதே மாதிரி சிவக்குமாரும் இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி எனக்கு தெரியாது. நான் கொண்டுவந்துள்ள வழக்கு ஆவணத்தை பார்த்திபன் தான் கொடுத்தார். அவர் சிவக்குமாரிடம் கையெழுத்து வாங்குங்கள் என்று சொல்லி கொடுத்தார். பார்த்திபன் எதற்காக இந்த ஆவணத்தை என் வசம் கொடுத்தார் என்றால் அவர் தாட்கோ அலுவலகத்திற்கு வருவார். அந்த சமயத்தில் என் வசம் கொடுத்தார். தாட்கோ அலுவலகத்தில் என் அப்பா வேலை செய்தார். நான் கொண்டுவந்துள்ள ஆவணத்தை தான் என் அப்பா என்னிடம் கொடுத்தார். நான் கொண்டுவந்துள்ள ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. பார்த்திபன் என்னிடம் இதை மடித்து வைடா அவரிடம் கையெழுத்து வாங்க வேண்டும் என்று சொன்னார். என்றைய தேதியில் கொடுத்தார் தேதி தெரியவில்லை. 2023 ல் கொடுத்தார். நான் அந்த ஆவணத்தை அப்படியே தற்போது வரை வைத்துள்ளேன். சிவக்குமாரிடம் கையெழுத்து வாங்க சொல்லி கொடுத்த ஆவணத்தை நான் ஏன் என் வசம் வைத்துள்ளேன் என்றால் அவர் வந்து வாங்கிக்கொள்கிறேன் என்றும் நீங்கள் கையெழுத்து வாங்கி வைத்திருங்கள் என்று சொல்லிக்கொடுத்தார். அதன் பின்னிட்டு நான் ஆர்.பார்த்திபன் மற்றும் சிவக்குமாரை கூப்பிட்டு இது போன்று ஒரு

ஆவணம் என் வசம் உள்ளது என்று சொன்னேனா என்றால் அவர்கள் தான் பேசிக்கொண்டு சொன்னார்கள். நான் சொல்லவில்லை. இந்த ஆவணத்திற்கும், வாதி, பிரதிவாதிகளுக்கும், எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. ஆவணத்தை என் வசம் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி கொடுத்தனர். ஆர்.பார்த்திபன் 2020 ம்ஆண்டிலேயே சிவக்குமார் மீது ஒரு வழக்கு தொடர்ந்துள்ளார்.

**குறுக்கு விசாரணை கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**